பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 20 திங்கட்கிழமை 06.12.2021 கதிர் 259

## கைதடியில் வெடித்து சிதறிய காஸ் அடுப்பு

யாழ்ப்பாணம், கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இந்தச்சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் எதுவித 2

## எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் சஜித் அணி போராட்டம்




பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்ற வளாகத்தில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டது.

அரசின் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், ஜனநாயகத்தைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# சபை அமர்வைப் புறக்கணித்தது சஜித் தலைமையிலான எதிரணி

## அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பில் ஆராயக் குழு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

நாடாளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி அந்தக் கட்சியினர் சபையைப் புறக்கணித்துள்ளனர்.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இன்று சபைக்குள் சென்றிருக்கவில்லை. 2

## அரச வன்முறைக்கு உடன் முடிவு கட்டப்பட வேண்டும்

### ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குக் எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சஜித் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்திய அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 2

## அராஜக செயலால் தீர்வை ஒருபோதும் எட்டவே முடியாது

### அரசிடம் வேலுகுமார் எம்.பி. இடித்துரைப்பு

அரசு தனது பலவீனத்தை மறைக்க, நாடாளுமன்றத்தில் அடக்குமுறையை - அராஜகத்தை கையில் எடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்றவளாகத்தில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் 2

## யாழில் 275 கிலோ கஞ்சா கடற்படையிடம் சிக்கியது!



(ந.லோகதயாளன்)

யாழ். மாதகல் கடலில் 7 மூடைகளில் மிதந்த 275 கிலோ கஞ்சா இன்று காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாகக் கருதப்படும் 7 2

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிரணியினரை சந்தித்த பிரதமர்



நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இன்று காலை நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை 2

## முல்லைத்தீவுக் கடலில் மூழ்கிய மூன்று பேரும் சடலங்களாக மீட்பு



முல்லைத்தீவு கடலில் நீராடச் சென்று, நீரில் மூழ்கி காணாமல்போயிருந்த மூன்று இளைஞர்களும் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், ஏனைய இருவரின் சடலங்களை 2

## பிணைமுறி மோசடி வழக்கின் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து ரவி கருணாநாயக்க விடுதலை



இலங்கையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கின் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார். 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## கைதடியில் .....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளன.

இந்தநிலையிலேயே கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளது.

## சபை அமர்வைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, நாடாளுமன்றத்துக்கு முன்னால் இன்று காலை அவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இதன்போது சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், மறுநாள் சனிக்கிழமை அது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில் இன்று காலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாக இணக்கம் காணப்படாத நிலையில், அவர்கள் இன்றைய சபை நடவடிக்கைகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்தனர்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாள்களில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவொன்றை அமைப்பதற்கு சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

இந்த வாரத்துக்குள் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று சபையில் தெரிவித்தார்.

## அரச வன்முறைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலியுறுத்தினார்.

அரசுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர், சபாநாயகரிடம் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும். அதற்கான உத்தரவாதத்தை அவர் இன்னும் வழங்கவில்லை. சபாநாயகர் நடுநிலையாகச் செயற்பட வேண்டும். மனுஷ விவகாரத்தில் தற்போதைய சபாநாயகர் மௌனம் காக்கின்றார்.

மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்திய ஆளுங்கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சபைக்குள் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அரச வன்முறைக்கு முடிவு கட்டப்பட வேண்டும் - என்றார்.

## அராஜக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஜனநாயகத்தின் உயரிய தளம் நாடாளுமன்றம். அங்கே மக்களது பிரச்சினைகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான பூரண வாய்ப்பு காணப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் பூரணமாக பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வசதியை சபாநாயகர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஆனால், இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அரச தரப்பின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியும் அதனது பங்காளிக் கட்சி உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறி நாடாளுமன்ற அமர்வைப் பகிஷ்கரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று அரசில் உள்ள அமைச்சர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்களது தேர்தல் தொகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. கிராமத்துக்கு, நகரத்துக்குச் சென்று மக்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரச தரப்பு உறுப்பினர்கள் குழப்பமடைந்த நிலையில் உள்ளனர். தமது விரக்தியை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது சுமத்தப் பார்க்கின்றனர். நாம் கேட்பது உங்களால் முடியுமாக இருந்தால் மக்களிடம் செல்லுங்கள். மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு விடை கூறுங்கள். மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வையுங்கள். அதனை விடுத்து அடிதடியால் தீர்வுகளை எட்ட முடியாது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக முன்வைப்பதற்கான சூழ்நிலையை சபாநாயகர் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனநாயக ரீதியாக உறுப்பினர்களுக்குக் காணப்படும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதைக் கொண்டு வந்து தரும். அதேபோல் சர்வதேசத்துக்கு எமது நாட்டைப் பற்றிய சரியான செய்தியைப் பெற்றுக்கொடுக்கும். அதனை விடுத்து மக்கள் பிரதிநிதிகளின் கருத்துச் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கி பிரச்சினைகளை மூடிமறைத்து இந்த அரசை முன்கொண்டுசெல்ல முடியும் என நினைப்பது வெறும் சிறுபிள்ளைத்தனமான செயலாகும் - என்றார்.

## 11 குற்றச்சாட்டுக்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2016 நல்லாட்சி அரசில் ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராகச் செயற்படும் போது, மத்திய வங்கி பிணைமுறிகளில் மோசடி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அவர் அமைச்சர் பதவியையும் இராஜிநாமா செய்தார்.

பிணைமுறி மோசடி வழக்கில் ரவி கருணாநாயக்க மீது 22 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன.

## யாழில் 275 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூடை கஞ்சா கடலில் மிதந்த சமயம் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து படகில் கஞ்சாவைக் கடத்தி வந்தவர்கள் கடற்படையினரை கண்டதும் அதனைக் கடலில் வீசிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட 7 மூடைகளிலும் 275 கிலோ கஞ்சா காணப்பட்டுள்ளது.

இந்த 275 கஞ்சாவை கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்துச் சென்றனர்.

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில் அந்த இடத்துக்குச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்தவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடியுள்ளதுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது இதற்கும் மேல் எம்.பிக்களை கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதன்போது, ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவ்விடத்தில் இருந்தமையுடன், அவர்களுடன் கடந்த காலங்களில் தான் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.

## முல்லைத்தீவுக் கடலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேடும் நடவடிக்கை அப்பகுதி கடற்றொழிலாளர்கள், பொலிஸார் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர்களது சடலங்களும் இன்று கண்டெடுக்கப்பட்டன.

நேற்று குறித்த பகுதிக்கு யுவதி உள்ளிட்ட நான்கு பேர் வாகனத்தில் வந்து, அப்பகுதியிலுள்ள கடலில் குளித்தபோது ஆண்கள் மூவரும் கடலில் மூழ்கிய சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா - மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய மனோகரன் தனுசன், தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்த 26 வயதுடைய விஜயகுமாரன் தர்சன், வவுனியா - மதகுவைத்தகுளத்தைச் சேர்ந்த 26 வயதுடைய சிவலிங்கம் சகிலன் ஆகியோரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புத்தாண்டில் நெருக்கடி!

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண வெளியிடும் தகவல்கள் நாட்டின் எதிர்காலம் குறித்துப் பலத்த சந்தேகங்களை உருவாக்கியுள்ளன.

முப்பது கோடி டொலர் பெறுமதியான தங்கம் உட்பட நாட்டிடம் இப்போது சேமிப்பில் இருப்பது ஆக நூற்றி ஐம்பது கோடி டொலர் பெறுமதி மட்டுமே.

நிதிச் சேமிப்புக் கூட ஆக நூற்றி ஐம்பது கோடி டொலர்தான். அதாவது நாட்டிற்குத் தேவையான அவசர – அவசிய – பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஒரு மாதத்துக்குக் கூட இது போதுமானதல்ல.

அதனால் அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள்கள் போன்றவற்றுக்கும் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் விரைவில் வருவது தவிர்க்கவே முடியாது என்கின்றார் அவர்.

இதனை நேரத்துடனேயே மக்களுக்கு அரசு அறிவித்து அவர்களை உஷார்படுத்தி வைத்திருந்தால் வரக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு அவர்கள் ஓரளவுக்கேனும் தங்களைத் தயார்ப்படுத்தியிருப்பர் என்கின்றார் அவர்.

குறைந்தபட்சம் வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் நிலைமையைச் சமாளிக்கத் தங்களைத் தயார்படுத்தியிருப்பர் என்று அவர் குறிப்பிடுவது சரியானதுதான்.

நாட்டின் முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையான சப்புகஸ்கந்தை நிலையம் முற்றாகச் செயலிழக்கும் அளவுக்கான நிலைமை நாட்டில் முதல் தடவையாக ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

நாட்டின் சொத்துக் கையிருப்பும் நாணய நிதிக் கையிருப்பும் வரலாற்றில் முதல் தடவையாக மிக மிக மோசமான அளவுக்குக் குறைந்திருக்கின்றமை – வற்றியிருக்கின்றமை – கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய நிலைவரமாகும்.

இந்த அரசு அதிகாரத்துக்கு வந்த சமயத்தில் வெளிநாட்டு நாணய நிதிக் கையிருப்பு எழுநூறு கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமாக இருந்தது. அது இப்போது வரலாற்றில் மிக மிகக் குறைந்த அளவாக நூற்றி ஐம்பது கோடிக்கு வீழ்ந்து விட்டது.

இத்தகைய பொருளாதார நெருக்கடிகளில் சிக்கிய எண்பது நாடுகளுக்கு – பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, மியான்மார் போன்ற ஆசிய நாடுகள் உட்பட பலவற்றுக்கு – அத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீண்டு, இயல்பு நிலைமைக்குத் திரும்புவதற்கு சர்வதேசம் நாணய நிதியம் அளவற்ற உதவியினை வழங்கியிருக்கின்றது. தொடர்ந்து வழங்கி வருகின்றது.

ஆனால் தற்போதைய இலங்கை அரசோ நாட்டின் பொருளாதாரத்தைத் தானும் மேம்படுத்துவதாக இல்லை. சர்வதேச நிலையத்தின் ஒத்துழைப்பு, ஆதரவைக் கோருவதாகவும் இல்லை.

இப்போதைய நிலைமை தொடருமானால் புத்தாண்டு பிறக்கும் போது நாட்டு மக்கள் முழுமையாக மோசமான நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியமை மட்டுமல்லாமல், வரப்போகின்ற பொருளாதார நெருக்கடிகள் பற்றிய முன்னெச்சரிக்கையை மக்களுக்கு வழங்க மறுத்து நிற்பதன் மூலம் அவர்களை இன்னும் நெருக்கடிக்குள் மூழ்கடிக்கப் போகின்றது கோட்டா அரசு.

# எங்களுடைய உரிமைக் குரல்களை நாடாளுமன்றில் நசுக்கப்பட்டுள்ளது

## வடிவேல் சுரேஷ் காட்டம்

நாடாளுமன்றத்தில் எங்களுடைய உரிமைக்குரல் நசுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

நாடாளுமன்றத்தில் அதிமுக்கிய அமைச்சுக்களின் குழுநிலை விவாதத்தில் கருத்து தெரிவிக்க இருந்த சந்தர்ப்பத்தில் எங்களுடைய ஜனநாயக உரிமை மீறி ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்க முற்பட்டதன் விளைவாக நானும் என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தின் நடவடிக்கையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தோம்.

தொழில் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பெருந்தோட்ட மலையக மக்கள் அதிகரித்துவரும் வாழ்க்கை செலவால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமையால் இன்றைய விலைவாசிக்கேற்ப அவர்களுடைய நாளாந்த வேதனம் 2 ஆயிரத்து 500 ரூபா ஆக உயர்த்தப்பட வேண்டும்.

உடனடியாக சம்பள நிர்ணய சபை ஒன்று கூட வேண்டும் என்ற கோரிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க இருந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய பேச்சுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. – என அவர் தெரிவித்துள்ளார்.




# மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் கொலை செய்யப்பட்ட இலங்கையர்

## எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானியர்கள் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் இலங்கை பிரஜை படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து லாகூரில் கடந்த (சனிக்கிழமை) ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், நபரின் கொலையைக் கண்டித்தமையுடன், இந்த சம்பவத்துக்காக மன்னிப்புக் கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பிரியந்த குமார என்ற இலங்கையர் கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் கொடூரமாகத் தாக்கப்பட்டு எரித்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பல பாகிஸ்தானியர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மனிதாபிமானமற்ற இந்தச் சம்பவத்துக்கு அவர்கள் தங்கள் டுவிட்டர் கணக்குகளில் இலங்கையிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# நாவலர் நினைவு தினம் வவுனியாவில் நடந்தது

சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலரின் நினைவுநாள் நிகழ்வு வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் உபநகர பிதா சு.குமாரசாமி தலைமையில் இந்தத நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது நாவலரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் அடிகளார் தொடர்பான சிறப்புரையை தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில், நகரசபை உறுப்பினர்களான க. சந்திரகுலசிங்கம், நா.சேனாதிராஜா, சுமந்திரன், சு.காண்டீபன், உள்ளூர்விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் கு.நந்தகுமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



# கொரோனாத் தடுப்பூசி செலுத்தினால் எய்ட்ஸ் வரும் பிரேஸில் ஜனாதிபதியின் கருத்து குறித்து விசாரணை

கொரோனாத் தடுப்பூசி எய்ட்ஸ் நோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என்ற பிரேஸில் ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் விசாரணையை தொடங்கியுள்ளது.

சமூக வலைதளத்தில் இந்த கருத்தை பதிவிட்டமையினால், போலி செய்தி கொள்கைகளின் கீழ் பேஸ்புக் மற்றும் யூடியூப்பில் இருந்து அவர் தற்காலிகமாக தடை செய்யப்பட்டார்.

தொற்றுநோயைக் கையாண்டது குறித்து பிரேஸிலின் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ ஏற்கனவே தனி விசாரணையை எதிர்கொண்டு வருகின்றார். தடுப்பூசிகளின் செயற்திறன் குறித்து அடிக்கடி சந்தேகம் எழுப்பிவரும் அவர் எய்ட்ஸ் நோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என கூறியுள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஆங் சாங் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறை

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரான ஆங் சாங் சூகிக்கு 4 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து மியன்மார் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மார் நாட்டில் கடந்த ஆண்டு இறுதியில் நடந்த பொதுத் தேர்தலில் ஆங் சாங் சூகியின் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. ஆனால் தேர்தலில் மோசடி நடந்திருப்பதாக கூறி ஆங் சாங் சூகி அரசாங்கத்தை கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அந்த நாட்டு இராணுவம் கவிழ்த்தது.

இதையடுத்து மியன்மார் மக்கள் இராணுவ ஆட்சியை ஏற்க மறுத்து வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

ஆங் சாங் சூகி உள்ளிட்ட பலரை இராணுவம் வீட்டுக் காவலில் வைத்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரதிநிதிகளை சிறையில் அடைத்தனர்.

அதன் பின்னர், தேர்தலின் போது சட்டவிரோதமாக வாக்கி டோக்கி வாங்கியது, தேசத்துரோகம், இரகசிய சட்டத்தை மீறியது, சட்ட விரோதமாக தங்கம் பெற்றது மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளை கடைப்பிடிக்காததன் மூலம் தேசிய பேரிடா மேலாண்மைச் சட்டத்தை மீறியது எனப் பல வழக்குகள் ஆங் சாங் சூகி மீது தொடரப்பட்டன. இந்நிலையில் 76 வயதான ஆங் சாங் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மியன்மார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

505(பி) பிரிவின் கீழ் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், இயற்கை பேரிடர் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. இவர் ஏற்கனவே 21 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கென்யாவில் நீரில் கவிழ்ந்தது பஸ் 23 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

கென்யாவில் திருமண நிகழ்வுக்கு ஆள்களை ஏற்றிச்சென்ற பஸ் ஆற்றில் கவிழ்ந்து வீழ்ந்ததில் 23 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கென்யாவின் தலைநகரான நைரோபிக்கு கிழக்கே உள்ள என்ஜியு ஆற்றில் உள்ள பாலத்தின் மீது வேகமாக ஓடும் தண்ணீருக்கு மத்தியில் பஸ் கடக்க முயன்றபோது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இறந்தவர்களில் 4 பேர் குழந்தைகள் என்றும் விபத்தில் சிக்கியவர்களில் குறைந்தது 12 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

23 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் இன்னும் பலர் பஸ்ஸில் சிக்கியிருக்கின்றனர் எனவும், மீட்புப் பணிகள் தொடர்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கென்யாவின் பல பகுதிகளில் சமீபத்தில் வழக்கத்திற்கு மாறான கனமழை பெய்து வருகிறமையினால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் முன்னாள் அரச படையினர் படுகொலை

## உலக நாடுகள் கண்டனம்

ஆப்கானிஸ்தானில் முன்னாள் அரசப் படையினர் படுகொலை செய்யப்படும் விவகாரத்தில், தலிபான்களுக்கு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து அமெரிக்கா, ஐரேப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, பிரித்தானியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

‘ஆப்கானிஸ்தானில் முந்தைய ஆட்சியின்போது பாதுகாப்புப் படைகளில் பணியாற்றியவர்கள் ரகசியமாக படுகொலை செய்யப்படுகின்றமை மற்றும் அவர்கள் மர்மமான முறையில் காணாமல் போகின்றமை குறித்து மனித உரிமைக் கண்காணிப்பு (ஹெச்.ஆர்.டபிள்யூ.) உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கும் தகவல்கள் மிகவும் கவலையளிக்கின்றன.

இத்தகைய நடவடிக்கைகள் மோசமான மனித உரிமை மீறலாகும். மேலும், முன்னாள் அரசுப் படையினருக்கு ஏற்கெனவே தலிபான்கள் அளித்துள்ள பொது மன்னிப்புக்கு விரோதமானதாகும்.

எனவே, தலிபான்களின் அனைத்து நிலைகளையும் சேர்ந்தவர்கள் பொதுமன்னிப்பு அறிவிப்பு முழுமையாக அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். முன்னாள் படையினரின் படுகொலைகள் மற்றும் காணாமல் போன சம்பவங்கள் குறித்து வெளிப்படையான, முறையான, பொறுப்புணர்வுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் தவறு செய்தவர்களுக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும்.



இத்தகைய உறுதியான நடவடிக்கைகள் குறித்து அனைத்துப் பிரிவினருக்கும் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும்.

அப்போதுதான், பொதுமன்னிப்புக்கு எதிராக முன்னாள் அரசப் படையினர் கொல்லப்படுவதும் காணாமல் போவதும் தடுக்கப்படும்.

ஆப்கானைக் கைப்பற்றிய பிறகு தலிபான்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை விட, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை வைத்துதான் அவர்களை அங்கீகரிப்பது குறித்து முடிவெடுப்போம் என்று கூறியிருந்தோம். அந்த நிலைப்பாடு இன்னும் தொடர்கிறது’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், கனடா, நியூசிலாந்து, ரோமேனியா, உக்ரைன் மற்றும் ஏராளமான ஐரோப்பிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாதுகாப்புப் படையினரால் பொதுமக்கள் 13 பேர் சுட்டுக்கொலை தவறான கணிப்பினால் நாகாலாந்தில் நடந்த கொடூரச் சம்பவம்

நாகாலாந்தில் பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொதுமக்கள் மீதே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அடையாளம் காண்பதில் ஏற்பட்ட தவறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதா? என விசாரணை நடந்து வருகிறது.

நாகாலாந்தின் மோன் மாவட்டத்தில் உள்ள ஓடிங் மற்றும் திரு ஆகிய கிராமங்களுக்கு இடையே உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பணி முடிந்து அவர்கள் நேற்று மாலை ஒரு வாகனத்தில் வழமைபோன்று வீடு திரும்பியுள்ளனர். அப்போது மோன் மாவட்டத்தில் நாகாலாந்தின் தேசிய சோஷியலிச பிரிவினைவாத அமைப்பின் கிளை அமைப்பான யுங்ஆங் குழுவினரின் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து அப்பகுதியில் தாக்குதல் நடத்த அவர்கள் தயாராக இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

அந்த சமயத்தில் தொழிலாளர்கள் வந்த வாகன ஓசையைக் கேட்டதும் பாதுகாப்புப் படை துப்பாக்கியால் சுட்டதில் அப்பாவிப் பொதுமக்கள் 13 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்து அண்டை மாநிலமான அசாமில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள நாகாலாந்து முதல்வர் நெய்ப்யூ ரியோ, இந்தச் சம்பவம் தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிடப்படும் என தெரிவித்துள்ளார்.





பொதுமக்கள் மீதே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதால் நாகாலாந்து முழுவதும் பதற்றமான சூழல் நிலவுகிறது. பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் சில கோபமடைந்த மக்களால் எரிக்கப்பட்டுள்ளன. மேலும் பல வன்முறைச் சம்பவங்களும் அங்கு இடம்பெற்றன எனவும், இந்த வன்முறைகளில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து, பொதுமக்களை அமைதி காக்குமாறு மாநில முதல்வர் ரியோ கேட்டுக்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்ற விசாரணை நடத்தப்படும் என அசாம் ரைபிள்ஸ் படை அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.





| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **பிறந்த திகதி** : 21.10.1987<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வெள்ளாளர்<br>**நட்சத்திரம்:** அத்தம்<br>**செவ்** : -<br>**தகைமை:** Automotive Technican Canada<br>**எதிர்பார்ப்பு:** யாழ்ப்பாணப் பெண் | **பிறந்த திகதி** : 1993.07.18<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வேளாளர்<br>**நட்சத்திரம்:** திருவாதிரை<br>**செவ்** : -<br>**தகைமை:** M.B.B.S<br>**தொழில்:** வைத்தியர்<br>**எதிர்பார்ப்பு:** வைத்தியர், பொறியியலாளர் |
| **பிறந்த திகதி** : 14.10.1983<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வெள்ளாளர்<br>**நட்சத்திரம்:** உத்தராடம் 2ம் பாதம்<br>**செவ்** : -<br>**தகைமை:** Media Communi cation<br>**தொழில்** : Stock Controller Canada<br>**எதிர்பார்ப்பு:** யாழ்ப்பாணப் பெண் | **பிறந்த திகதி** : 1992.05.30<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** : குருகுலம்<br>**நட்சத்திரம்:** பரணி<br>**செவ்** : -<br>**தகைமை:** A/L<br>**தொழில்** :<br>**எதிர்பார்ப்பு:** உள்ளூர் மணமகன் |
| **பிறந்த திகதி** : 02.06.1987<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** கோவியர்<br>**நட்சத்திரம்:** ஆயிலியம்<br>**செவ்** : 7ல்<br>**தகைமை:** M.B.B.S<br>**தொழில்** : வைத்தியர்<br>**எதிர்பார்ப்பு:** வைத்தியர் பொறியியலாளர் | **பிறந்த திகதி** : 09.04.1991<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வெள்ளாளர்<br>**நட்சத்திரம்:** திருவோணம்<br>**செவ்** : -<br>**தகைமை:** கட்டட பொறியியலாளர் (கொழும்பு)<br>**தொழில்** : பொறியியலாளர் (கொழும்பு)<br>**எதிர்பார்ப்பு:** பொறியியலாளர் |
| **பிறந்த திகதி** : 21.1.1990<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வெள்ளாளர்<br>**நட்சத்திரம்:** அனுசம் 3ம் பாதம்<br>**செவ்** : 4ல்<br>**தகைமை:** A/L<br>**தொழில்** : Restaurant France<br>**எதிர்பார்ப்பு:** யாழ்ப்பாணப் பெண் | **பிறந்த திகதி** : 1992.07.06<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** கோவியர்<br>**நட்சத்திரம்:** உத்தரம் 4ம் பாதம்<br>**செவ்** : -<br>**தகைமை:** M.B.B.S<br>**எதிர்பார்ப்பு:** வைத்தியர், பொறியிலாளர், கணக்காளர், நில அளவையாளர் |

0776505097
0778876969

தலைமை அலுவலகம் ;
கனடா
001416661855


## நாகாலாந்து துப்பாக்கிச்சூடு விவகாரம் மத்திய அரசைச் சாடிய ராகுல் காந்தி

நாகாலாந்தின் மோன் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் என்று நினைத்து பொது மக்கள் 13 பேரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்ற சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இதற்குக் கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சிகள் இந்திய மத்திய அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இது குறித்து காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில், நாகாலாந்தில் அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இதயத்தை உலுக்குகிறது. தங்களது சொந்த மண்ணில் பொது மக்களுக்கோ அல்லது பாதுகாப்புப் பணியாளர்களுக்கோ பாதுகாப்பு இல்லாதபோது உள்துறை அமைச்சகம் என்ன செய்துகொண்டிருக்கிறது? இதற்கு இந்திய மத்திய அரசு உண்மையான பதிலை அளிக்க வேண்டும், என்று பதிவிட்டிருக்கிறார்.

## புதுச்சேரியில் தடுப்பூசி கட்டாயச்சட்டம் அமுல் யூனியன் சுகாதாரத்துறை முக்கிய அறிவிப்பு




புதுச்சேரியில் கொரோனாத் தொற்றுப் பரவல் படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக அங்கே பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு கடந்த 20 மாதங்களுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது. அவ்வப்போது தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளபோதிலும் ஊரடங்கு முழுமையாக நீக்கப்படவில்லை.

கொரோனாத் தொற்றைத் தடுக்க, 100 சதவீதம் தடுப்பூசி செலுத்தப்பட்ட யூனியன் பிரதேசமாக புதுச்சேரியைக் கொண்டுவருவதற்கு அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம்களை புதுச்சேரி அரசின் சுகாதாரத்துறை தொடர்ந்து நடத்திவருகிறது. வீடுவீடாகச் சென்று தடுப்பூசி செலுத்தும் பணியும் நடக்கிறது.

இதுவரை முதல் தவணை தடுப்பூசியை 7 லட்சத்து 74 ஆயிரம் பேரும், இரண்டாவது தவணை தடுப்பூசியை 4 லட்சத்து 48 ஆயிரம் பேரும் செலுத்தியுள்ளனர். ஒட்டு மொத்தமாக 77 சதவீதத்தினர் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

தற்போது உலகம் முழுவதும் உருமாறிய கொரோனா வைரஸான ஒமிக்ரோன் பரவல் அதிகரித்து வரும் நிலையில் கொரோனாப் பரவலைத் தடுக்கும் விதமாக புதுச்சேரியில் தொற்று நோய் பரவுதல் தடுப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. புதுவை பொதுச் சுகாதாரச் சட்டம் 1973 இன் பிரிவு 54(1) விதியின் கீழ் அனைவரும் கட்டாயம் இரு தவணைக் கொரோனாத் தடுப்பூசியும் செலுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனாவைத் தடுக்கும் வகையில் கட்டாய தடுப்பூசி சட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படுகிறது. இதை மீறுபவர்கள் சட்டவிதிகளின்படி தண்டிக்கப்படுவார்கள். தடுப்பூசி செலுத்தாதவர்கள் பொது இடங்களில் சுற்றிவருவதால் கொரோனா பரவும் அபாயம் அதிகரித்துள்ளது. இதனால், தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழை பொது இடங்களுக்கு வருபவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டும். வெளியே நடமாடுபவர்களிடம் சான்றிதழ் உள்ளதா? என சோதனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம். தடுப்பூசி செலுத்தாதவர்கள் வெளியே சுற்றினால் நடவடிக்கை எடுக்கப்படும், என்று புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குநர் ஸ்ரீராமலு தெரிவித்திருக்கிறார்.

## பாடசாலை சமூகத்தினரால்

# மட்டு. ஆசிரிய சங்கத் தலைவரை இடமாற்றக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் உதயரூபனை பாடசாலையில் இருந்து இடம் மாற்றுமாறு கோரி மட்டக்களப்பு சிவானந்தா தேசிய ஆண்கள் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள் இன்று திங்கட்கிழமை பாடசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

குறித்த பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வரும் மட்டக்களப்பு இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் உதயரூபன் தொழிற்சங்கம் என்ற போர்வையில் பாடசாலையில் மாணவர்களுக்கு கற்பிப்பதில்லை உட்பட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை இடமாற்றுமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து பாடசாலைக்கு முன்னால் இன்று காலை 7 மணிக்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் மட்டு. மாநகரசபை மேஜரி. சரவணபவன், மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு 'வேண்டாம் வேண்டாம் உதயரூபன் வேண்டாம், ஆசிரியர் ஸ்தானத்துக்கு தகுதியற்ற உதயரூபனை வெளியேற்று, வலயக் கல்வி பணிப்பாளரே உதயரூபனின் அடாவடித்தனத்தை நிறுத்து, படுவான்கரை மைந்தன், முல்லைமகன், கல்லடி ஆசான் போன்ற போலி முகநூலின் சூத்திரதாரியை வெளியேற்றுங்கள் கல்விகற்பிக்காத உதயரூபன் வேண்டாம், மாகாண கல்வி பணிப்பாளரே உடன் நடவடிக்கை எடுங்கள், எமது பாடசாலைக்கு உதயரூபன் வேண்டவே வேண்டாம், தொழிற்சங்கம் என்ற பேர்வையில் சர்வதிகாரம் செய்துவரும் உதயரூபன் வேண்டாம்' போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் உதவி கல்வி பணிப்பாளர் ரவிச்சந்திராவிடம் மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



## கல்முனையில் மின்வெட்டு

அவசரத் திருத்த வேலை காரணமாக கல்முனை, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி, நாளை பாண்டிருப்பு, அக்பர் கிராமம் ஆகிய பகுதிகளிலும் சனிக்கிழமை (11), நீதிமன்ற வீதி, ரெஸ்ட் ஹவுஸ் வீதி, வீட்டுத்திட்டம் குறுந்தயடி, பாலமுனை, அட்டாளைச்சேனை, ஒலுவில் வீட்டுத்திட்டம், ஹிச்ரா பிரதான வீதி, அம்பாறை வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

திங்கட்கிழமை (13), சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும் செவ்வாய்க்கிழமை (14), அம்பாறை வீதி, வங்கலாவாடி, சென்னல்கிராமம் ஆகிய பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

18ஆம் திகதி, வைத்தியசாலை வீதியிலிருந்து தாளவெட்டுவான் ப்ரதர் ஹவுஸ் வீதி, மணல்சேனை, மருதமுனை, துரவந்திய மேடு, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, சென்னல்கிராமம் மலையடிகிராமம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

21ஆம் திகதி, மைகாட்டி இருந்து நைனாகாடு ஆகிய பகுதிகளிலும் 29ஆம் திகதி, சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டக்காடு மக்களுக்கான குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மாநகர் கட்டக்காடு மக்களின் நீண்டநாள் தேவையாக இருந்து வந்த குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நேற்று குடிதண்ணீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மஜ்மாநகர் கிராமத்தில் அமைந்துள்ள வொன்பிடல் ரேஜ் நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் எக்ஸ்போ லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீப் யூசிப் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் மரணமடைந்த சப்ரினா யூசிப்பின் நினைவாக சுத்திகர்க்கப்பட்ட இக் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் குடிதண்ணீர் திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள 150 குடும்பங்கள் நன்மை அடைவார்கள் என்று அபிவிருத்தி சங்க தலைவர் ஏ.எல். சமீம் தெரிவித்தார். இந் நிகழ்வின் நினைவாக அதிதிகளால் வீதியோரங்களில் மரங்களும் நடப்பட்டன.

## கிரான் ஆற்றில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்ந்தோர் கைது

*மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸார் பிரிவிலுள்ள கிரான் பகுதியிலுள்ள ஆற்றில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்ந்து கனரக வாகனத்தில் ஏற்றிய இருவரை இன்று திங்கட்கிழமை (06) அதிகாலையில் கைது செய்தமையுடன் இரண்டு கனரக வாகனங்களை மீட்டுள்ளோம் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.*

*பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய குறித்த பகுதியில் சம்பவதினமான இன்று அதிகாலை பொலிஸார் முற்றுகையிட்டனர் இதன் போது கனரக வாகனங்களில் சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றிக் கொண்டிருந்த இருவரை கைது செய்தமை யுடன் கனரக வாகனத்தை மீட்டனர்.*

*இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

# மண்முனைப்பற்று பிரதேசத்தில் மீன் சந்தைக்கான அடிக்கல் நாட்டல்

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக கடந்த பல வருடங்களாக இப்பகுதி வறிய மீன்பிடியாளர்களின் வேண்டுகோளின் பெயரில் வெயிலிலும் அடை மழையிலும் தாம் பிடித்த மீன் இறால் என்பனவற்றை பாதுகாப்பான இடத்தில் வைத்து விற்க முடியாமல் சிரமப்பட்டனர். தற்போது அப்பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் சி. சந்திரகாந்தன் அவர்களின் முயற்சியின் பலனாக இவர்களுக்கு கிடைத்துள்ளது.

மண்முனைப்பற்று பிரதேசத்தின் மண்முனை கிராம சேவகர் பிரிவில் மண்முனை பாலத்திற்கு அருகில் மீன் சந்தைக்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் முயற்சியின் பலனாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் மீன் சந்தைக்கான 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது மீனவர்கள் செறிந்துவாழும் இம்மண்முனைப் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள மீன் சந்தை மூலம் மீனவர்கள் நன்மை அடைய உள்ளதுடன் மீன்களை சந்தைப்படுத்துவதற்கும் இலகுவான வழி கிடைக்கவுள்ளது



இவ் அடிக்கல் நாட்டு ஆரம்ப நிகழ்வனது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபைஉறுப்பினருமானபூ.பிரசாந்தன் தலைமையில் இடம் பெற்றது. மண்முனைப் பற்று பிரதேச தவிசாளர் தர்மரெட்னம் தயானந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டமையுடன் மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர் ஜேக்கப் ஆற்றல் பேரவை செயலாளர் கிஸ்கந்த முதலி உள்ளிட்ட மீனவர்கள் பலரும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் இந்திய அணிக்கு இலகுவான வெற்றி!




மும்பையில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 372 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த 3ஆம் திகதி தொடங்கியது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்து களமிறங்கி, நியூசிலாந்து அணியின் அஜாஸ் படேலின் அற்புதமான சுழல்பந்துவீச்சில் 325 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அஜாஸ் படேல் இந்திய அணியின் அனைத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தி சாதனை நிகழ்த்தினார்.

இதையடுத்து, நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்து, இந்திய அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி 28.1 ஓவர்களில் 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அஸ்வின் 4, மொஹமட் சிராஜ் 3, அக்சர் பட்டேல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து நியூசிலாந்தை போலோ-ஒன் முறையில் மீண்டும் துடுப்பெடுத்தாட அழைக்காது, இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடி, நேற்றைய தினத்தில் 7 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது இன்னிங்ஸை முடித்துக்கொண்டது. மயங் அகர்வால் 62, புஜாரா, சுப்மன் கில் இருவரும் தலா 47, அக்சர் பட்டேல் ஆட்டமிழக்காது 41, விராட் கோலி 36 ஓட்டங்களை எடுத்தனர். நியூசிலாந்தின் அஜாஸ் பட்டேல் 4 விக்கெட்டுக்களையும், ரச்சின் ரவீந்த்ரா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் நியூசிலாந்து வெற்றிபெற 540 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும், நியூசிலாந்து அணியால் 167 ஓட்டங்களை மட்டுமே பெற முடிய, இந்திய அணி 372 ஓட்டங்களால் இந்தப் போட்டியில் வெற்றிபெற்று தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. நியூசிலாந்து அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் டரில் மிச்செல் 60 ஓட்டங்களையும் ஹென்றி நிக்கொல்ஸ் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்திய அணியின் அஸ்வின், ஜயந்த் யாதவ் இருவரும் தலா 4 விக்கெட்டுக்களையும் அக்சர் பட்டேல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக மயங் அகர்வாலும், தொடரின் சிறப்பாட்டக்காரராக அஸ்வினும் தெரிவு செய்யப்பட்டனர்.



## சவுதி அரேபியன் கிராண்ட் பிரிக்ஸ் லூயிஸ் ஹமில்டன் முதலிடம்

போர்முலா-1 கார்பந்தயத்தொடரின் சவுதி அரேபியன் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும் 22 சுற்றுகளாக நடைபெறும்'போர்முலா - 1'கார் பந்தயத் தொடரில் நடப்பு ஆண்டின் 21ஆவது சுற்றான கட்டார் கிராண்ட் பிரிக்ஸ், நேற்று ஜெட்டா கார்னிச் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

308.45 கிலோ மீற்றர் பந்தயத் தூரம் கொண்ட இந்தப் போட்டியில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் பங்கேற்றனர். இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின்வீரரானலூயிஸ்ஹமில்டன், பந்தயத்தூரத்தை 2 மணித்தியாலங்கள் 6 நிமிடங்கள் 15.118 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதற்காக அவருக்கு 26 புள்ளிகள் வழங்கப்பட்டன.

ஹமில்டனை விட 21.825 வினாடிகள் பின்தங்கிய ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் இரண்டாவது இடத்தையும் 18 புள்ளிகளையும் பெற்றார். 27.531 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தயத் தூரத்தைக் கடந்த மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்ததோடு 15 புள்ளிகளையும் பெற்றார்.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 22 சுற்றுகளின் முடிவில், ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஒன்பது வெற்றிகள், 369.5 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் ஏழு வெற்றிகள், 369.5 புள்ளிகளுடன் இரண்டாவதிடத்திலும், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ், ஒரு வெற்றி 218 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இந்த வருடத் தொடரின் இருபத்தியிரண்டாவது சுற்றான அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 12ஆம் திகதி யாஸ் மெரினா சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## டேவிஸ் கிண்ண டென்னிஸ் தொடர் ரஷ்ய அணி சம்பியனானது




டேவிஸ் கிண்ண டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் குரோஷியாவைத் தோற்கடித்து ரஷ்யா சம்பியனாகியுள்ளது.

அரையிறுதிச் சுற்றில் சேர்பியாவைத் தோற்கடித்த குரோஷியா அணியும், ஜேர்மனியை வென்ற ரஷ்ய அணியும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியிருந்தன. நேற்று நடைபெற்ற இறுதிச்சுற்றில் முதலில் நடைபெற்ற இரு ஒற்றையர் ஆட்டங்களிலும்ரஷ்யாவெற்றிபெற்றதால் இரட்டையர் பிரிவு ஆட்டம் நடைபெறாமலேயே தொடரை 2-0 என்ற கணக்கில் ரஷ்ய அணி கைப்பற்றியது.

முதலாவது ஒற்றையர் பிரிவுப் போட்டியில் ரஷ்யாவின் அன்ட்ரே ருபலெவ், 6-4, 7-6 என்ற நேர் செட்களில் குரோஷியாவின் போர்னா கோஜேவையும், இரண்டாவது போட்டியில் ரஷ்யாவின் டானில் மெட்வெடேவ், குரோஷியாவின் மரின் சிலிக்கை 7-6, 6-2 என்ற நேர் செட்களிலும்வெற்றிபெற்றுடேவிஸ்கிண்ணத்தைத் தமது அணிக்காக வென்று கொடுத்தனர். மட்ரிட்டில் நடைபெற்ற இத்தொடரில் 18 நாட்டு அணிகள் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எல்.பி.எல். முதலாவது போட்டியில் கோல் கிளேடியேட்டர்ஸ் வெற்றி

லங்கா பிரீமியர் லீக் 2021 தொடரின் (எல்.பி.எல்.) நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் பலம் மிக்க ஜப்னா கிங்ஸ் அணியை எதிர்கொண்டு விளையாடிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்து. முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பானுக ராஜபக்ஷ 56 ஓட்டங்களையும், சமித் பட்டேல் 42 ஓட்டங்களையும் எடுத்தனர். ஜப்னா கிங்ஸ் அணியின் ஜெய்டன் சீல்ஸ் 3 விக்கெட்டுக்களையும், வனிந்து ஹஸரங்க 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன்போது, வனிந்து ஹஸரங்க தன்னுடைய 100 ஆவது ரி-20 விக்கெட்டையும் பெற்றிருந்தார். பின்னர் 165 என்ற வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணி, 18.4 ஓவர்களில் 110 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ஜப்னா கிங்ஸ் அணியின் வஹாப் ரியாஸ் 27 ஓட்டங்களையும், உபுல் தரங்க 17 ஓட்டங்களையும் எடுத்தனர். கோல் கிளாடியேட்டர்ஸின் சமித் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும், புலின தரங்க மற்றும் மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சமித் பட்டேல் தெரிவானார். எல்.பி.எல். தொடரில் இன்றைய தினம் இரண்டு போட்டிகள் நடைபெறுகின்றன. முதலாவது போட்டியில் தம்புள்ள ஜயன்ட்ஸ், கண்டி வரியர்ஸ் அணிகளும், இரண்டாவது போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸ், கொழும்பு ஸ்டார்ஸ் அணிகளும் விளையாடுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பிரியந்த கொலையுண்டமையை செய்திகள் மூலமே அறிந்தேன்!

## நீதி கோருகிறார் அவரின் மனைவி



உயிரிழந்த தனது கணவரின் கொலைக்கு நீதி வழங்கப்படவேண்டும் என சியால் நீதிமன்றில் கொல்லப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் பிரியந்த குமாரவின் மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, தனது கணவரின் மரணம் தொடர்பாக பாகிஸ்தான் இலங்கை அரசாங்கங்கள் நேர்மையான முறையில் விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

செய்திகள் மூலமே அவர் கொடூரமான விதத்தில் கொல்லப்பட்டமையை தாங்கள் அறிந்தேன் எனவும், அதன் பின்னர் இணையத்திலும் சம்பவம் தொடர்பாகப் பார்த்தேன் என பிரியந்த குமாரவின் மனைவி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் மிகவும் அமைதியான மனிதர் எனத் தெரிவித்த பிரியந்த குமாரவின் மனைவி, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதன் மூலம் தனது கணவருக்கும் தனது இரு பிள்ளைகளுக்கும் நீதியை வழங்குமாறு இரு நாடுகளினதும் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



## சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள் நாளை முதல் மீளவும் ஆரம்பம்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதன் செயற்பாடுகள் நாளை (செவ்வாய்க்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 50 நாள்களுக்குத் தற்காலிகமாக மூடப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அறிவித்தார். சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டாலும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அவர் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் இலங்கையர் கொலை; இராதாகிருஷ்ணன் எம்.பி. கண்டனம்



பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

பாகிஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமை துன்பகரமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையர் ஒருவர் அடித்து – துன்புறுத்தப்பட்டு – எரித்து கொல்லப்பட்டுள்ளார். இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இதற்காக இலங்கை அரசும் முழுமையாகப் போராட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல நூறுபேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதி நிலைநாட்டப்படும் என பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது.

அதேபோல இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து மக்கள் விடுதலை முன்னணி கவலை



நாடாளுமன்றில் அண்மையில் இடம்பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர் மீதான தாக்குதல் முயற்சி சம்பவங்கள் தொடர்பாக ஆராய குழு ஒன்றை நியமிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் கூட இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகப் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

மேலும் இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினால் விசாரணை நடத்தப்பட்டதாகவும் எவ்வாறாயினும், அவர்கள் வழங்கிய அறிக்கையின் ஊடாக எதுவுமே வெளிவரவில்லைஎனவும்அவர்சுட்டிக்காட்டினார்.

அத்தோடு குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்கு என்றாலும் நாடாளுமன்ற நடவடிக்கையில் இருந்து அவர்களை இடைநிறுத்தக் கூட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நியமிக்கப்படவுள்ள குழுவின் அறிக்கை கிடைக்க மேலும் மூன்று மாதங்கள் எடுக்கும் அதேவேளை இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினை இருப்பதாகவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

அத்தோடு குழுவொன்றை நியமிப்பதன் மூலம் விடயத்தை தாமதப்படுத்துவதற்குப் பதிலாக, சம்பவத்தை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உள்ளது எனவும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார். கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின்போது ஆளும் கட்சி உறுப்பினர் எதிர்க்கட்சி உறுப்பினரை தாக்க முற்பட்டார்.

இந்நிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பாக ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றில் அறிவித்திருந்த நிலையில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்

# அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை சுரண்டுகின்றனர்

## டலஸ் காட்டம்

இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை சுரண்டுகின்றனர் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், இந்தச் செயற்பாட்டை நிறுத்தாமல் அரசியல்வாதிகளால் முன்னோக்கி செல்ல முடியாது என கூறினார்.

மேலும் தான் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலில் வெற்றி பெற மக்களிடம் தண்ணீர், வீதி மற்றும் மின்சாரம் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தருகிறோம் எனக் கூறியே வாக்கு கேட்கின்றனர் எனவும் அவர் கூறினார். இவ்வாறு கேட்கும் யுகத்தை இல்லாமல் செய்தாலேயே புதியவர்களும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்றும் இதனை மாற்றுவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும உறுதியளித்தார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2021இல் வெளியிடப்பெற்றது.